T-UN-226
(88)

# திருநாகை

# நான்மணிமாலை.

—:0:—

போளூர் போர்டுஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

கருந்திட்டைக்குடி பண்டித வி. சாமிநாதபிள்ளை அவர்கள்

இயற்றியது.

இயற்றியவரால்

தஞ்சை

பங்கஜவல்லி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

1923.

விலை] [அணா 2

காப்பிகள் 1000.

உ

சிவமயம்.

# திரு நாகை நான்மணி மாலை.

---

போளூர் போர்டுஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
கருந்திட்டைக்குடி பண்டித வி. சாமிநாதபிள்ளை அவர்கள்
இயற்றியது.

தஞ்சை
பங்கஜவல்லி அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.
1923.

விலை] [அணா 2

---

# Opinion.

M. R. Ry. S. Gnana Desigam Pillai Avl. B. A.,
*Sub-Registrar of Tiruvalamarulur writes:—*

This work '*Nanmani Malai*' The Garland of four gems has been written in chaste and lucid Tamil. The Author, though young, has exhibited his mastery of the language by the free use of expressions, similes and metaphors modelled on those of the great Epics, Kambaramayanam and Villi-Baratham and Thiruvilayadalpuranam etc. From its religious aspects the poem is soul-stirring and highly appealing. The Author must be congratulated on his poetic merit and comprehensive power.

INSCRIBED

TO

THE SACRED MEMORY OF

VIDWATHJANABUSHANAM

V. GOPALASAMI RAGHUNATHA RAJALIAR

F. T. S., O. S. E.

OF

HARITHWARAMANGALAM

MY BENEFACTOR AND WELLWISHER

உரிமையுரை.

---

வெண்பா.

பூமி முழுதும் புகழரிதைக் கோபால
சாமிரகு நாதரா ஜாளியர்க்—காமெனவே
நானிந்த நாவினைத்தான் நன்குரிமை யாக்கினனால்
வானந்தன் னார்கொடைக்கா மற்று.

[N.B.—வான் நந்து அன்னார் கொடை - மழைக்கொடைதானுங் குறைவுறச்செய் அவரது மிகுகொடை.. அன்றி, மேகமும் சங்கநிதியும் போன்றவர் கொடை எனலுமாம்.]

# முகவுரை.

சிவராஜதானி க்ஷேத்திரமாகிய இத்திருநாகப்பட்டணத்து யாம் வதிந்த பல்லாண்டுகளிலுஞ் சிவதெரிசனஞ் செய்யச் செல்லுநாடோறுஞ் சிந்தித்த வெல்லாந் தந்திரட்சிக்கும், ஸ்ரீ காயாரோகணப் பெருமானுக்கு ஓர் தமிழ் மாலை சாத்துதல் வேண்டுமென்னும் பேரவாத் தோன்றி வளர்ந்தது. எனினும், என்னையோ அஃது இதுகாறும் முற்றுறத் திருவருள் நேர்ந்திலது. எனவே, திருவருட் செயலாலிப்போது யாம் நாகையினீங்கித் திருவண்ணாமலைக்கு வடபாலுள்ள போளூர் போர்டு ஸ்கூல் தமிழ்ப்பண்டித உத்யோகத்தமர நேர்வதால், எங்ஙனமாவது அவ்வவாவினை முற்றுவித்தே யேகல் வேண்டுமெனச் சங்கற்பித்துக்கொண்டு நாளு மவனருள்துணையா முயன்று இந்நான்மணிமாலையா நூலை யியற்றினேம்.

செந்தமிழ்க்கல்வி சிறிது நிரம்பாச் சிறியேமும் நூல் செய்யப்புக்கமை யறிஞர் கண்டு நகையாடற்காமென முன்னுணர்வே மாயினும் ஆசைப்பெருக்கானும், 'ஏழையடியாரவர்கள் யாவை சொன சொன் மகிழு மீசன்' எனுமான்றோரருளிச் செயலிலுள்ள பெருநம்பிக்கையானும் ஒருவாறு துணிந்து இதனை இயற்றுவான் புக்கேம். ஆதலின். "குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்"

இனி, இந்நூல் எவ்வித எம் இலௌகிக நிலைவேறுபாடுகளானுப் இடையூறுறுவண்ணம் பல்லாற்றானுமுதவியூக்கமளித்து, இந்நற்றிரும் பணியை முற்றுவித்து, எம்மை இகபர வாழ்வுக்கு இலக்காக்குவித்த எமதருமை மாணவநண்பரும், நாகபட்டினத்துப் பரம்பரைச் சைவ சோழபுர நன்மரபு தழைக்கவந்த தர்மப்பிரபுகுலசிகாமணியுமாயுள்ள ஸ்ரீமான்: அ. மு. சாமிநாத செட்டியாரவர்கள் செய்ந்நன்றி என்று மறக்கற்பாலதன்று.

மேலும், இந்நூலைப் பார்வையிடுவதில் தமதருமைமிக்க அவகாசத்தைப் போக்கியருளிய வித்துவ ஸ்ரீமான்கள்: வெ. இராமசாமி வன்னியர், அ. பாலசுப்பிரமணியபிள்ளை, மு. வேங்கடசாமி நாட்டார் முதலிய கரவிலா அன்புவிரவிய பெரியார்க்கும், சிறப்புக்கவிகள் தந்து சிறப்பித்த ஏனைய புலவன்மார்க்கும் எம்மனமார்ந்த நன்றியறிதலை அறிவிக்க எழுமையுங் கடமைபூண்டுளேம்.

இதனை உடையூர் வித்வான் ஸ்ரீமத்: சு. ஞானதேசிகம்பிள்ளை B.A., அவர்களைச் சபாநாயகராகக் கொண்ட தஞ்சைப் பள்ளியக்கிரகாரக் கலைபயில்கழகத்து ஆண்டுநிறைவுக் கூட்டத் தரங்கேற்றுவித்திட வுதவி புரிந்தருளிய அக்கழகத்தலைவர் ஸ்ரீமான். ப. சிங்காரவேற்பிள்ளையவர்கள் முதலாமன்பர்கட்கும் வந்தனமளிக்கின்றேம்.

எல்லாஞ்செயவல்ல ஈசன் திருவருள் எளியேஞ் செய் இந்நூலு மினிதுமுடியத் துணைநின்றமையை எண்ணி எண்ணி அவனடியை மறவாமை வழுத்திவாழ்வேம். சுபம். சுபம்.

வி. சாமிநாதன்.

# சிறப்புக்கவிகள்.

*தஞ்சாவூர், பிரம்ம-ஸ்ரீ சதாவதானம் சுப்பிரமணிய ஐயாவர்கள் இயற்றிய ஆசிரிய விருத்தம்.*

ஆன்மணிசங் கம்பதும நிதிக்கிறைவ னயன்மாலென் றுந்தே வர்க்கு, மேன்மணியா நாகைக்கா ரோணத்தான் மார்பினின் முன் வேய்மாலைச்சி, ரோன்மணியோ டொப்புறழ்வு சீர்தூக்கி யுள்ளநனி யுவந்து பூண, நான்மணிமாலையையணிந்தா னற்சாமி நாதகவி நாவல் லோனே.

---

*திருவாரூர், கவர்ன்மெண்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர், பிரம்மஸ்ரீ K. M. சிதம்பர ஐயர் அவர்கள் இயற்றியது.*

சீர்மேவு வளமிகுந்த திருநாகைக் காரோணச் சிவபி ரானுக், கேர்மேவு நான்மணிமாலையையினிது புனைந்துநனி யிசையே யார்ந்தான், பார்மேவு புலவர்களுட் சிகாமணியே போல்பவனம் பமரம் பாடுங், தார்மேவு புயமலையான் சாமிநா தப்பேர்பூண் டகைமிக் கோனே.

---

*நாகபட்டின முத்திமண்டபத் திருக்கூட்டத் தலைவரும், நாகை வெளிப்பாளையச் சைவசித்தாந்த சபையின் அக்ராசனாதிபதியு மாயிருந்த சோ. வீரப்பசெட்டியாரவர்களின் திருவடிக்கன்பு பூண்ட பௌத்திரர் ஸ்ரீமான் சோ. மா. தெ. முத்துக்காயாரோகண செட்டியாரவர்களியற்றிய விருத்தம்.*

சொற்பொருள் வடிவா நிற்கும் சுயம்பிர காசத் தொல்லோன்
கற்பனை கடந்த நாகைக் காரோணன் கமல பாத
நற்புகழ் விளங்க வோர்நன் நான்மணி மாலை வேய்ந்தான்
பொற்புறுஞ் சாமி நாத புண்ணியப் புலமை யோனே.

---

*'நாகை நீலலோசனிப்' பத்திராதிபரும், மதுரைத்தமிழ்ச்சங்க வித்துவானும், நாகை நாஷனல் ஐஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதருமாயிருக்கும், ஸ்ரீமான் ஜி. சதாசிவம்பிள்ளை யவர்கள் கூறிய ஆசிரிய விருத்தம்.*

நல்லூரி லாறுமுக நாவலன்பா லெந்நூலு நலக்கக் கற்றோன், சொல்லூரு மவையுளா ருணரவிரித் துரைவன்மைத் தோலா நாவான், செல்லூரும் பொழிலியாழ்ப் பாணநகர் செய்தவம் போற் சிறந்தான் றஞ்சைக், கல்லூரி விசுவலிங்க பண்டிதனுங் கலைவல்ல கவிஞ ரேறே.

வேறு.

பாவலர் கூட்டந் தம்மிலே சேரும் பாக்கிய மெனக்கருள் புரிந்தோன், நாவலர் மகிழும் பாவருள் பெருமா னல்கிய நற்றவக்குமரன், காவலர் புகழுஞ் சாமிநா தப்பேர்க் கலைவலோனுன் மணி மாலை, பூவலர் சோலை நாகைக்கா ரோணர் பொன்னடிக் கணிந்தனன் புகழே.

அற்பணி யடியார்க் காரருள் சுரக்கு மண்ணலார்க் கழகுற வமைக்கும், பொற்பணி தேயும் புண்ணிய வாளர் பொருப்பிது வோவெனச் சமைக்குங், கற்பணி சிதையு நாகைக்கா ரோணர் கழலிணைக் கன்புடன் சாத்துஞ், சொற்பணி தேயா தாதலாற் சுவாமி நாதனுஞ் சுகுணன்வா ழியவே.

வேறு.

முத்தார மணிவயிரக் கோவையொன்று சுந்தரற்கு முன்னுளிந்தோன், சத்தான குணநிறைந்த சாமிநா தப்பேர்கொள் தமிழ்வ லோன்பாற், புத்தாநான் மணிமாலை வாங்கியே புனைந்துகொண்டான் புதுமை பாரீர், வித்தார பாத்திரத்திற் சிறிதீயிற் பெரிதாக விளையுந் தானே.

தந்தையார் மைந்தருக்குத் தருமணிமா லிகைசூட்டித் தழுவக் கண்டேம், மைந்தனுர் தந்தையர்க்கு மணிமாலை சூட்டுகின்ற வழக்கங் காணேம், எந்தையார் காரோணர் எழில்பெற நான் மணிமாலை யியைத்தா னன்றே, தந்தையார்க் குபதேசஞ் சாற்றினோ னென்செய்யான் றகுதி தானே.

வேறு.

நான்மணி மாலை சூட்டு நங்குரு மகற்கு நன்கு
நான்மணி மாலை சூட்ட நாடினே னரேச னல்லேன்
தேன்மணி மாலை வண்டின் றெரியலாற் கதனுற் பாவான்
மேன்மணி மாலை சூட்டி மிகமன மகிழ்ந்து ளேனே,

---

தஞ்சையைச் சார்ந்த கூடலூர் வித்துவான் ஸ்ரீமான் வெ. இராமசாமி வன்னியரவர்களியற்றிய கட்டளைக் கலித்துறை.

சொற்பொலி வோடு பொருட்பொலி வுற்றுத் துகளறநற்
கற்பனை மேவிய நான்மணி மாலை கவினுறவே
யற்பினி னாகைக்கா ரோணற்குச் சூட்டி யருள்சிறந்தான்
பற்பல நூலுணர் சாமிநா தப்பெயர்ப் பாவலனே.

மதுரை ஜில்லா செம்பூர் தமிழ்ப்புலவர் மகா-ா-ா-ஸ்ரீ வீ. ஆறுமுகஞ் சேர்வையார் இயற்றிய அறுசீரடி யாசிரிய விருத்தம்.

சங்கரத னங்களுட்டண் டருதரள மணியுதவத் தரங்க மென்னுஞ், சங்கரத னங்கமிசை வில்லொளிரத் தாங்குமிசைச் சலதி நாகைச், சங்கரத னங்களன தமிழ்த்தொடர்கள் சார்வுறப் பொற் றாம மாவா, சங்கரத னங்களிடை விரவவுமை தழுவு மந்தத் தாணு மீதே.

தோமினான் மணிமாலை புனைந்திட்டுப் பேரன்பாற் றுதித்து நாளும், பூமினா தன்மறைநாப் புத்தேளுந் தேடரிய புராரி யெங்கள், வாமினா தன்கருணைவரம் பெற்றிங் குரன்பெற்றேவாழ் வும் பெற்றான், சாமினா தப்பெயர்கொள் சற்குணமே திகழினிய தமிழ்வல் லோனே.

---

கும்பகோணம டவுன் ஐஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் அ. பாலசுப்பிரமணிய பிள்ளையவர்களியற்றிய வெண்பா.

நாகைக்கா ரோணற்கு நான்மணிமா லைப்பனுவல்
ஒகையாற் கூறி யுரைபடைத்தான்—றோகையாற்
கன்பாற் பலபாச்சொற் றாருளாற் பாடுரிமை
தன்பாற்கொள் சாமிநா தன்.

---


மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவானும், திரிசிரபுரம் S. P. G. காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாயுள்ள நடுக்காவேரி ஸ்ரீமான் மு. வேங்கடசாமி நாட்டாரவர்களியற்றிய விருத்தம்.

பணமாலை யணிநாகைக் காரோணர் பொன்னடிக்குப் பரிவி னால்நான், மணிமாலை யொன்றணிந்து பவமாலை யறமாற்றி மாண்புற் றானற், குணமாருங் கோபால சாமிரகு நாதப்பேர்க் கோமா னுக்கோர், அணியாவான் சாமிநா தப்பெயர்கொள் தமிழ்ப்புலவ னாகு மம்மா.

---

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை ஸ்ரீமான் மு. கல்யாணசுந்தர செட்டியாரவர்களியற்றிய வெண்பா.

நான்மணிமா லைப்பனுவ னாகைக்கா ரோணற்குப்
பான்மணிபோற் செந்தமிழாற் பாடினான்—மேன்மைபெறு
தண்கரந்தை யோங்கவரு சாமிநா தப்புலவன்
வண்கவினார் கோமான் மதித்து



உ

திருச்சிற்றம்பலம்.

# திரு நாகை நான்மணி மாலை.

---

## கடவுள் வணக்கம்.

---

ஸ்ரீ நாகாபரணப் பிள்ளையார் துதி.

நேரிசை வெண்பா.

வான்மருவு தேவர் வணங்கு திருநாகை
நான்மணிமா லைப்பனுவ னன்கியம்ப—பான்மைதரும்
நாகா பரண விநாயகனார் நற்சரணம்
ஏகாதென் னெஞ்சி லிருந்து.

ஸ்ரீ மாவடிப்பிள்ளையார் துதி.

பாவடிக ளோங்கப் பரிந்தருளு நன்னெஞ்சே
மாவடிவா ழத்தியடி வாழ்த்து.

---

# நூல்.

## வெண்பா.

கடனாகைக் காரோணா காருணியா கண்பார்
மடனாடு முள்ளத்தெம் மாது—படர்நாளுங்
கொண்டாற்றி நிற்கின்றாள் கோவேநின் றார்பெற்ற
வண்டாற்றி னெஞ்சுகண் வைத்து (௧)

## கட்டளைக் கலித்துறை.

வைய மணித்தேர் மதிரவி கால்கணை மான்மலையே
செய்ய சிலையாக் கொடுசென் றவுணர் திரிபுரங்கள்
எய்ய விளநகை செய்தரு ணாகை யிறையடிக்கே
பொய்யி லடிமை புகுவீர் புலவீர் பொருளிதுவே (௨)

## விருத்தம்.

இதுவோ வதுவோ வென்றென்றெஞ்
    ஞான்று மியம்பி யெய்த்திளைக்குஞ்
சதுர்வே தமுமென் றாலெளியேஞ்
    சாற்றத் தகுமோ நின்னியறான்
விதுதா வியசெஞ் சடைமவுலி
    விமலா நாகை வியன்பதிக்கண்
மதுவார் குவளை விழிமலையான்
    மடந்தை மணாள வகுத்தருளே (௩)

## ஆசிரியப்பா.

அருளுடை யடிகே ணினையடை யுயர்நெறி
தன்னைப் பலருந் தாமறிந் தனரே
யாயினு மதனை நாயினுங் கடையேன்
கண்டில னேனும் பண்டுநின் றிருப்பதி
யலைகடல் வீசிய வலைதனிற் படுஉ
மீன்முதல் நினக்கு விடுப்பதென் றடுத்த
விரதம் பூண்ட பரதவர்க் காக
முன்னும் பின்னு முதல்வ யாருங்

கண்டறி கில்லாக் கணிப்பரு விலைபெறு
மணிமீ னென்று வரவிடுத் தவர்மனத்
திண்மையை யிந்தச் செகமெலாங் கண்டுயக்
காட்டுபு விளக்கிய கருணையை யாதலின்
சரத விரத நிரதமாக் கொண்டிடிற்
றுனை யாட்கொளல் தம்பிரான் கடனெனத்
துணிந்தனன் மகிழ்ந்து பணிந்திரந் தொழுகிப்
பொய்யகன் மனத்தா லைய நினக்கே
நனந்தலை யுலகிற் றினந்தலைப் படுபொரு
ளியாவே யாயினுஞ் சேவே றுகைத்தவ
நொய்யள வேனுந் துய்யவென் றுவியோ
டர்ப்பண மெனவே யாற்றிடு கொள்கைய
னுதவி னெந்தை யாதி புராண
பூத நாத வேத கீத
அறக்கொடி பாக வம்பல வாண
நாக நாத போக மோக்க
திருத்தகு விருத்த காவிரி தீர்த்த
மருத்தியொ டாடக் கருத்தினி லெண்ணினுங்
கனவருள் சுரக்கு நளைமலர்த் தாள
மஞ்சுகண் படுக்கு மிஞ்சிசூழ் நாகையிற்
காயா ரோகண கவலலி லடியனுக்
கிகபர மிரண்டினு மின்ப
மிகவரு ளழக விடங்கவீச் சுரனே (௪)

## வெண்பா.

ஈச காயிலை யிறைவ திருநாகை
வாச வுமைபாண் மகிணேச—பாச
வலைவளைத்த வென்னையினி வாழ்விப்பாய் மேரு
மலைவளைத்த தேவதே வா. (௫)

## கட்டளைக் கலித்துறை.

வாளார் மதிநுதன் மாதர்தம் மாசை மயலழுந்தி
நாளா யினவெலாம் வாளாக் கழிந்தன நன்கினிச்சென்
றுளா குவைதிரு நாகையி லெம்மா னரனடிக்கே
கேளா யினிதுநீ யுய்வழி வேறென் கெடுமனமே (௬)

## விருத்தம்.

மனமகிழ் நல்லோர் கூட்ட மருவுதல் வறியோர்த் தேடித்
தினமகிழ்ந் தீதல் சற்றுஞ் செறிபழிக் கஞ்சல் நின்பேர்
கனவினும் வழுத்த லெங்குங் கருணையே கனிந்து காட்டல்
எனவிவை யெனக்கு வாய்த்தல் என்றுகா ரோணத் தானே (எ)

## ஆசிரியப்பா.

காரோண நாத கயிலாய வாச
ஆரணங் தேடரு பூரண புராதந
முத்தி மண்டப மூவா முதல்வ
பத்தி யடியார் பச்சிலை யிடினு
நத்திவீ டளிக்கு நாதமா தேவ
மூவரு மறியொணா மூல காரண
கருந்தடங் கண்ணி பொருந்தொரு பாக
மால்விடை யுகைத்த நீல கண்ட
நின்னடிக் கடியேன் பன்னுதல் கேண்மதி
கண்ணகன் ஞாலத் தெண்ணில்பல் யோனியி
னுதித்ததி னுதியா தொன்றொன் றாக
மாறி மாறி யீறில் காலங்
கறங்கெனச் சுழன்று கரைபெற லின்றிக்
கருப்பா சயமெனு மிருட்குழிப் பன்னாட்
சிறைப்பட் டிருந்து நெருக்குற் றம்ம
வெளிவரு தோறு மளியையென் சொல்வல்
யான்படும் பாடு மியாய்படும் பாடுஞ்
சொல்லுவ தெளிதே தோன்றிய பின்னரு
மின்னா தினிய தென்றறி யாத
பிள்ளைமை தன்னிற் கொள்ளரு நோயினுங்
குமாரப் பருவங் கூடுறு காலைக்
கூடா வொழுக்கக் கூட்டச் சார்பினும்
ஒக்கலு மனையு மோம்புதற் காகத்
திக்கெலா மோடித் தேடரு முயலினும்
படந்தரு மல்குன் மடந்தையர்க் கழிபினும்
வாணா ளனைத்தும் வீணாக் கழிக்குபு
நரைத்துந் திரைத்து நாநடுக் குற்று
முரைத்தல் குளறுமவ் விருத்த தசையினு
மைந்தர் முதலினோர் வந்தன பகர்வினு

நோய்க்கோட் பட்டும் பாய்க்கோட் பட்டு
முளதா மவத்தையென் றுரையவ வினதோர
அதாஅன் று
இவைகழிக் தேகுவ மினிதே யென்னிற்
சாதலி னின்னு தில்லை யெனவு
மிறப்ப தனக்கென் கடவே னெனவு
மறப்பெரு மடியா ரருளின ராங்கே
மரணந் தன்னை மதித்திடு போதென்
கரணம் படுதுயர் கத்தநீ யன்றி
யாரே யறிகுந ராதி புராண
கங்கர விடங்கொள் சுந்தர விடங்க
மந்திர சொரூப மகேசுர வதனு
லெந்நிலை யடியனே னின்புறு மாறு
வந்நிலை யளித்திடின் னருளா
லென்ப தன்றிமற் றொன்றறி யேனே (அ)

## வெண்பா.

அறியேன் கருணை யநவரத நின்சீர்
குறியாநின் றுண்மெலிந்தாள் கோதை—வெறியார்ந்த
வங்கொன்றைத் தார்தா வழகவிடங் காவடைவார்க்
கிங்கொன்றைத் தாரா யெனின் (கூ)

## கட்டளைக்கலித்துறை.

என்னெஞ்ச மேசொல் லிமையோர் துயருக் கிரங்கியலை
வன்னஞ்ச முண்டவன் வாழ்திரு நாகை வளம்பதியான்
முன்னஞ்சி வந்த மறையவற் காக முனிந்துநமன்
றன்னெஞ் சிறவுதைத் தான்கழல் சார்தற்குத் தாமதமே* (ய)

* தாமதம் என் சொல் எனக்கூட்டுக.

## விருத்தம்.

தாந்தினையு முண்ணமற் சார்ந்தவர்க்கு மீயாமற்
றரைக்குண் மூடிப்
போந்தருண மொருவர்க்கும் புகலாம லிறந்தழியும்
புல்லர் போலா
தாந்தனையும் பொருளறத்திற் செலவழித்தும் மடிநீழ
லரசு * வைகும்
வேந்தருமே பணியவரு நிலையருளிர் திருநாகை
விமல நீரே (யக)

* வைகும் நிலை எனக்கூட்டுக.

## ஆசிரியப்பா.

ஈர வேணி நாரி பாக
ஆனே றுகைத்தரு ளமரர்க டலைவ
திங்கட் கொழுந்தணி செக்கர்வான் சடில
ஆரா வமுத தீராக் காத
விமையா சலம்பெறு முமையாள் கொழுந
மன்றினி லாடிய வன்றிறற் பாத
கற்றவர் பரவப் பெற்றவ முன்னம்
புண்டரீ கற்காப் பொய்படு மெய்யினை
யண்டரே மாக்க வருட்டிரு மேனியோ
டாக்கிய காய மார்க்க சகாய
விந்திரன் போற்றரு சுந்தர விடங்க
வுலகம் புரந்திட வோங்குநின் கருணைச்
சேவடித் துணைமலர் சென்னி சேர்க்குதுந்
தாவகல் பிறவித் தளைபொடி படவே (௰௨)

## வெண்பா.

படமருவு பூணோ பகிர்மதியோ பாவை
யிடமருவு மேனி யியலோ—விடமருவு
கண்டமோ தோளுடையோ காரோணா காதலித்திங்
குண்டறியாள் பேதை யுரை (௰௩)

## கட்டளைக் கலித்துறை.

உரைத்தாரும் போற்றி யறியா வொருவ னுவமையிலி
விரைத்தார் மவுலி விளங்கு மழக விடங்கப்பிரான்
மரைத்தா ளிணைக்கீழ் மருவிய நம்மையு மானுவரோ
தரைத்தா நசைகொண் டவன்பெயர் சாற்றத் தயங்குகரே. ௰௪

## விருத்தம்.

தயைநிறை கடலே யென்பாற் றண்ணருள் புரிக தோன்று
தியைபெருந் துணையே முன்னா ளிசைபெறு சுந்த ரர்க்கா
வயமிகு பரிபொன் னுடை வழங்கிய கோவே நாகைப்
பயணிறை யைங்கு ரோசப் பதிவல மகிழுந் தேவே (௰௫)

## ஆசிரியப்பா.

தேவ தேவ திரிபு ராந்தக
யாவரு மறியொணு மேவரு நிலைமைய
ஆடுகொடி நுடங்கு பீடுகெழு மாடத்
தரம்பையர் நடிக்கும் வரம்பயில் சீர்த்தி
யந்தண் நாகைச் சுந்தர விடங்கநின்
வயங்கொளி மார்பிற் றயங்கிய கொன்றைத்
தாரா தரித்தவித் தையலர் தரித்த
வெள்வளை வாங்கிச் செம்பொன் றருதலிற்
பிள்ளை மதியோ னென்னநிற் பேசுதல்
வள்ளலே தகுமென மதித்தன மியாமே (௰௬)

## வெண்பா.

யாமே சிரம்பெற்றேம் யாதுங் குறைவில்லோம்
பூமே லயன்றிருமாற் புத்தேட்கு—மாமே
திடனுகை யானென்றுந் தேர்ந்துதவர் போற்றுங்
கடனுகை யான்பொற் கழல் (௰௭)

## கட்டளைக் கலித்துறை.

கழலா தரித்தவர் தங்கள் கவலை கடிந்தருள்செ
யழலார் விழிய னணிநாவ லூர னருடமிழ்க்கா
வுழலா மடந்தையர் தூதா நடந்த வொருவனிடங்
குழலார் மொழியர் நடமறு நாகைக் குளிர்பதியே (௰௮)

## விருத்தம்.

பதியார் சிரத்துன் கழலேதும்
பகிரா ரடியர்க் கொருநாளும்
மதியா ரகத்துன் றிருநாமம்
வறியா ரிவர்க்கெங் கருள்வாய்கொல்
நுதியார் கணிச்சிக் கரத்தாய்நன்
னுதலா ளிடத்துப் பிரியாதாய்
பதிநா கையிற்பண் டமர்வோய்பொற்
பதநீ யெனக்குத் தருவாயே (௰௯)

## ஆசிரியப்பா.

வாயாப் பொருட்குப் பேயாப் பறக்குமென்
புன்மதி கெடுத்துனைப் போற்று
நன்மதி கொடுத்தருள் நாகைகிழ வோனே (உ௰)

## வெண்பா.

கிழவனுப் மூத்துக் கிடந்துவழி கோழை
வழவழவென் றாற்றெழுமுன் வந்து—மழவிடைமேல்
ஓகையா னேறு முமாதேவி பங்காள
நாகையா யுய்வழிநீ நல்கு (உ௰க)

## கட்டளைக் கலித்துறை.

நல்வழி யேசென் றுனைநினை மாதவர் நாடுபொருள்
பல்வழி யாலும் பெறவரு ளேசெய் பரமவெனைப்
புல்வழி நீக்கிப் பொருந்துபஃ றுன்பப் புரைதவிர்த்தா
ளல்வழி கண்ட வணிதிரு நாகை யமர்ந்தவனே (உ௰உ)

## விருத்தம்.

தவலருந் தொன்மை சார்தரு கல்வி
தருகுணம் கேள்விகள் பலவும்
பவவினை யகலவும் பரிந்தருள் புரிந்துன்
பதந்தனை யநுதினம் பரவ
நவநவ வின்பந் திளைத்திட வருணீ
நாகையி லமர்ர்க ணொருங்கிக்
கவலகன் மனத்தாற் கருதிடக் கனிந்து
கருணைசெய் கடவுளர் கோவே (உ௰ங)

## ஆசிரியப்பா.

கோயிலின் முன்றிலி னுண்டுகிற் கொடிகள்
அடியவர் வம்மி னல்லவர் போமின்
என்பது குறிப்ப தேய்ப்ப விடையறு
தாடிய தடமதிற் பீடுகெழு நாகைப்
பதியமர் பொருப்பவிம் மதியமர் நுதலி
வேய்மென் றோளிக் காவெம தண்ணல்

ஆதி புராண னலர்மலர்ச் சேவடி
தொழாஅ தவர்மனங் கடுப்ப விருணிறை
நள்ளிர வதனின் வருத லொழிமதி
கள்ளி வேகுமிக் கடுஞ்சுர நெறியே (௨௰௪)

## வெண்பா.

நெறியாதுங் காணேற்கு நீள்கழல்கள் காட்டிச்
செறியா வகைவினைக டீரப் — பொறியார்
விடனாக கங்கணவா விண்ணோர் தலைவா
கடனாகை யீசா கருது (௨௰௫)

## கட்டளைக் கலித்துறை.

கருமேனி மாயனும் போதனுந் தேடியுங் காண்பரிய
திருமேனி யான்றிரு நாகை யமர்ந்த சிவபெருமான்
மருமே வியசே வடிமா மலர்மனம் வைத்தவர்க்கு
வருமோ விறந்து பிறந்திளைத் தேதிரி வாதனையே (௨௰௬)

## விருத்தம்.

தனையறிந்த ஞானியர்கள் தமக்கே யென்றுந்
தண்ணருள்செய் நாயகனே தமிய னேற்கு
நினையறியு நெறிகிடைக்க நீயே சற்று
நினைக்கினல்லா லெவ்வகையி னேருங் கண்டாய்
வனைகழலோ ருலகமெல்லாம் வயங்க னின்றன்
மன்னியசங் கற்பமாத் திரையே யன்றோ
அனையினும்பே ரருளுடையா யருளல் வேண்டு
மணிநாகை வியன்பதிக்க ணமர்ந்த தேவே (௨௰௭)

## ஆசிரியப்பா.

தேமலி கமலப் பூமலி தடவயற்
செந்தே னிறைதலிற் செந்நெல் விளையுந்
திருவமர் சீர்த்திப் பொருவக னாகையிற்
றெண்டிரைக் கடற்கரை சேர்ந்தவண் மீனின
முட்டை கவரும் பெட்டையங் குருகே
வாடையின் மெலிந்து வைகறைப் போதில்

இருகணீ ரொழுக வொருநீ போந்து
மேனி நுடங்க வெளுத்த காரணம்
யாதோ கூறாய் மாதோ வீண்டுத்
தணந்த நுமரு மின்ன
மணைந்திலர் தாமோ வணியிளங் குருகே (உ௰அ)

### வெண்பா.

குருவாக வந்து குருந்தடியி லாண்ட
திருவாளற் காளாய்ச் செனித்தே—மொருவாத
தொண்டுசெய்தே நாகையெய்தித் தொல்பிறவி நீங்குநெறி
கண்டுகொண்டே முண்டோ கவல் (உ௰௯)

### கட்டளைக் கலித்துறை.

கவறுங் கொலையுங் கனங்குழ லாரிடங் காமுறுமத்
தவறும் பிறவு மிறையுந் தணவாச் சழக்கனெற்கும்
பவமு மறுத்தனை யாண்டனை யென்னும் பரிசுளதோ
நவமென் மணிபடு நாகைப் பரமவிஞ் ஞாலத்தினே (௩௰)

### விருத்தம்.

ஞாலமிதிற் பழியாமே ஞானியருக் குறவாய்நான்
காலனிடத் தணுகாதுன் காலபரவற் கருள்வாயே
நீல்விழிக் கிறைவாமால் நேடயனுக் கரியானே
நாலுமறைப் பொருளானே நாகைநகர்ப் பெருமானே (௩௰௧)

### ஆசிரியப்பா.

மானிடந் தாங்கிய கோனே போற்றி
ஆனிடத் தைந்து மாடினை போற்றி
காலனைச் செற்ற கழலோய் போற்றி
ஆலமுண் டமரரை யளித்தோய் போற்றி
நாகை நகரமர் ஒகையாய் போற்றி
முக்க ணுடைய மூர்த்தீ போற்றி
திக்கணி யாடைத் தேவே போற்றி
கங்கை யாறு தங்கிய செஞ்சடைப்
புண்ணியா போற்றி போற்றி யென்றே
எண்ணருங் கால மெளியே மியம்பிப்

போற்றினு முடியாப் புகழினை நீயே
ஆதலி னைய வோதிய தொண்டுன்
திருவடிப் புணைதந் தெம்மைக்
கருவடி வக்கடல் கடப்பிப் பாயே (௩௰௨)

## வெண்பா.

பாய்புலித்தோ லாடை பலியே பகருணு
தாய்பெறு வாண்பெண் டனியுருவ—மாய்பொருள்சேர்
தென்னாகை யாயுன்னைத் தேவரெலா மெப்போதும்
இன்னாகை யாற்போற்ற லென் (௩௰௩)

## கட்டளைக் கலித்துறை.

என்றேய் தருமொழி னாகையி லெம்மா னிருங்கழல்கள்
நன்றே வணங்கு பரிசிலர் போல நமைவருந்தக்
கன்றே பிரிந்தகல் கற்று வெனவிந்தக் காவகத்தென்
குன்றே யனைய முலையாள்விட் டாயமுங் கூடியதே (௩௰௪)

## விருத்தம்.

கூடியே மாந்த ரோடு கோடாது கோடி தேவர்
நாடியே வணங்கக் கண்டு நயந்தருள் புரிவான் நாகை
பாடியே பரவு மேன்மைப் பாக்கியம் பெற்றேம் நம்பாற்
றேடியே போந்து காலர் செய்வதென் றியங்கல் நெஞ்சே (௩௰௫)

## ஆசிரியப்பா.

நெஞ்சே கேணின் னிலைபுணர்ந் தனனே
யஞ்சே னினிநினக் கன்றி யெவர்க்கு
மாட்பட லில்லை னறிஞரென் பாரெலா
நின்றனக் காட்படா துன்றனை யவர்நெறி
நிறுத்துதல் வேண்டி நீர்நிலை தன்னினும்
நெருப்பி னுள்ளும் விருப்புற வகற்றிப்
பலநா ணின்று பலமுத லுண்டு
தம்மைத் தாமே சாலவும் வருத்தி
யாற்றவுந் துன்ப மடைகுவ ரம்ம
வன்றியு நின்றுணை யின்றி யாரே

ஒன்றிய பதமெலா முற்றனர் தாமே
நீயே,
நல்வழிக் கியைந்து நடப்பினு நடப்பை
யல்வழிப் புக்குமே யலமரச் செய்குவை
இதனான்,
முன்னெறி நிற்பினீ முதல்வனைப் பெறுகுவம்
பின்னெறி நிற்பினே பெருநர கடைகுவம்
இன்னவை யிரண்டு நின்னா லியைவன
என்னுமோர் நின்னிலை யினிதுணர்ந் தனனே
ஆதலி னென்றன் காதன் மனமே
நின்னையே சரணெனப் பன்னாள் கழித்தனிவ்
வாற்றலி லெளியனை யழிதர விடயத்
திரைத்திடா தின்னமு மெழின்மிகு நாகையின்
மாயா வருணிறை காயா ரோகணன்
றொடொரு தாய்யுந் தனிவழிப் புகுத்திப்
பீடுயர் பதம்பல பெறுமா
நீடிய வாழ்வினி னிறுத்துவை யெனவே (௩௰௬)

### வெண்பா.

வேதப் பொருளான் விரும்புமடி யார்க்கெளியான்
சீதப் புனனாகைத் தேவர்பிரான்—பாதப்
புதுமலரே நந்தம் புகலிடமாப் பெற்றேம்
எதுமனமே மற்றரிதிங் கே (௩௰௭)

### கட்டளைக் கலித்துறை.

இங்கே யினிவர வில்லை யிமையோ ரினிதுறையும்
அங்கே யிருந்தர சாளு மவற்கு மடைவரிய
பங்கே ருகத்தடஞ் சூழ்திரு நாகைப் பதியிறைவர்
தங்கே ளமரடி யாரடிக் கேதொண்டு சார்ந்தனமே (௩௰௮)

### விருத்தம்.

மேவு நாகையார்
தேவ தீர்த்தமாம்
வாவி மூழ்கினோர்
பாவ நாசமே (௩௰௯)

## ஆசிரியப்பா.

நானில மருங்கினின் மேனில மாகிய
வானில மருங்குளார் தாமு மகிழ்ந்து
வந்தடி பணிந்தே வரம்பல பெறூஉங்
கந்தமார் பொழில்சூழ் கடனா கைப்பதி
விரும்பி யமர்ந்த பரம்பர திகம்பர
நிரம்பிய வன்பினி னின்னடி பரவி
வரம்பல பெற்றோர் தமைவகுத் துரைப்பின்
விண்டுவும் பிரமனு மண்டர்தங் கோவும்
ஆறிரண் டாயவவ் வாதித்தர் தாமுஞ்
சந்திர னொடொரு செந்தீக் கடவுளும்
நாமங் கேட்பினு நடுக்கம தெய்துறும்
ஏம ராசனு மிவரலா திப்புவி
வாழுநர் தம்மின் மாக்கடல் குடித்த
மகத்துவ மிக்க வகத்தியர் முதலாஞ்
சத்த முனிவரு மெத்துசீர்த் திறலுடைச்
சாலீ சுகனெனுஞ் சால்புடை வேந்தனும்
பார்புக ழிராமனும் பரசு ராமனும்
மாசில் பூசைசெய் கோசிக முனிவனும்
ஈண்டிய சிறப்பமர் பாண்டிய வேந்தனும்
தரும புஞ்சனுஞ் சார்ங்க பாகனும்
பாற்கர னெனுமொரு பார்ப்பன ரேறும்
இட்டமார் தந்தையைத் திட்டவோர் மிருகமென்
றட்டவே தியனு மித்திர னவனும்
தான்வழி படச்செல் தருணம் போந்த
வானவர் கோவை வாயிலோர் தடுப்பவின்
வேந்தனு மோர்புடை விசனமீ தூர
ஐயனை யன்பிற் பதிட்டைசெய் தாங்கே
பூசனை யாற்றவும் புண்ணியன் வெளிப்படூஉத்
தனக்குமா னிடர்செய் தாழ்வினுக் கிரங்கி
யகற்றிட வையனை யன்பினிற் பன்முறை
பணிந்தன னாகவும் பரம்பரன் றானும்
எமைத்தொழு வார்தமி லிமையவர் மனித்தரென்
றமைத்திடு பேத மிலையிவ ணடைந்தோர்
யாவரே யாயினுந் தேவநா டாள்வோய்
வேண்டுவ தருதலே யீண்டுநம் முளமென
விளம்பிடப் பெற்ற விசித்திர கவசனும்

உளநிறை யன்பின் வளவர்கோ மகனும்
விடுநில மருங்கிற் படுபுல் லார்ந்து
திரிதரு கின்ற மிருகம் யாவையும்
வதைத்தத னூனுடல் கதித்திடு குட்ட
வெந்நோய் தீர்வுற விடுதர வேந்தும்
வயநிறை கலிங்கச் சய்துங்க னோடு
சரும மகன்றுயர் தரும வணிகனும்
ஆவா துரோக மனுவாற் றினுமே
தீவாய் நிரயஞ் சேர்குதல் திண்ணமென்
றேவரு மறிதர மேவரு பிரம
ராக்ஷத னாகிய புரோகித நாமனும்
மகவினை வேண்டித் தருதலஞ் சூழ்ந்திடும்
உருகிய வன்பினி னிருகமா வேந்தனும்
படுகள் ளுண்ட கொடுபழி தவிர
வேதியர் தாமும் ஓதிய படியே
கழுவா யிதென வழுவா தழலெழக்
காய்ச்சிய நெய்யினை மாய்ப்பது கருதாக்
குடித்திடப் புகுங்காற் கூய்வருந் தியவவன்
தந்தை தனக்குச் சாண்டிலி யம்முனி
போந்தரு ளியபடி புராதந விப்பதி
போந்துதன் பவக்குறை போக்கியே நலமெலாங்
கண்ட மேன்மைச் சண்ட தருமனும்
எத்தரை யும்புகழ் பத்திர சேனனும்
ஓகையில் வலம்வரு மூகையா மொருவனும்
மேல்வரு பத்தியி னல்வ ரடியரும்
உத்தம ராமதி பத்த வடிகளும்
நாற்றிசை யோரும் போற்றிட வீசன்
சட்ட நாதனைச் சமைந்தருள் செயப்பெறும்
இட்டமா ரிராம தேவ சித்தருங்
கயிலை நாதனைக் காட்சிதந் தருள
மயலகன் றுயர்தவ வசிட்ட முனிவனுங்
கைம்மிகு பூசையார் நைம்மிச முனிகளும்
அளப்பில ரம்ம வாங்கவர் போல
நின்னருட் குதவா நீசனே னாயினும்
தாயிலன் புடைமை தராதல மறிய
வென்னையு நின்னடி யவனாக்
காப்ப துன்கடன் கருணையங் கடலே. (௪௰)

(முற்றிற்று.)

இந்நூலை யச்சிடப் பொருளுதவிய புண்ணியவாளர் பெயரும், உதவிய தொகையும்.

---

| ஊர். | பெயர் முதலியன | தொகை |
|---|---|---|
| திருநள்ளாறு ... | ஸ்ரீமான் க. சிங்காரவேற் பிள்ளையவர்கள் (மேயர்) ... | ரூ 5 |
| நாகப்பட்டணம் ... | ,, அ. மு. கூத்தப்ப செட்டியாரவர்கள் | 5 |
| ஷை ... | ,, அ. மு. சிதம்பர செட்டியாரவர்கள் | 5 |
| ஷை ... | ,, அ.மு. சக்கரபாணிசெட்டியாரவர்கள் | 2 |
| ஷை ... | ,, அ. மு மயிலப்ப செட்டியாரவர்கள் | 3 |
| ஷை ... | ,, அ. மு. சாமிநாத செட்டியாரவர்கள் | 15 |
| ஆடுதுறை ... | ,, ந. ராமசாமி செட்டியாரவர்கள் ... | 5 |
| காகூர் ... | ,, M. முத்துவேலு செட்டியாரவர்கள் | 2 |
| சென்னபட்டணம்... | ,, ஆதிசெல்வராமலிங்கம்பிள்ளையவர்கள் | 5 |
| ஆழ்வார் குறிச்சி ... | ,, N.T. சுப்பிரமணியமுதலியாரவர்கள் | 5 |
| பள்ளியக்கிரகாரம்... | ,, ப. சிங்காரவேற்பிள்ளை அவர்கள் ... | 5 |
| ஷை ... | ,, வா. முத்துசாமி நாயுடுகாரு ... | 5 |
| ஷை ... | ,, அம்மையப்பபிள்ளை அவர்கள் ... | 5 |

திருச்சிற்றம்பலம்.

